# தமிழ்ச் சிட்டு



## படிப்படி யாக...!

படிப்படி யாகத்
துடிதுடிப் போடு,
அடியை எடுத்துவை,
பாப்பா!—நீ
முடிவு வரைக்கும் நட,
பாப்பா!—ஒரு
முன்னேற்றம் கண்டுவிடு,
பாப்பா!

அடிப்படி யில், நடை
தடைப்படி னும், உன்
அடிப்படை விடாதே,
பாப்பா!—உளப்
பிடிப்பினை விடாதே,
பாப்பா!—இந்தப்
படிப்பினை மறவாதே, பாப்பா!

இடைப்படு வார், சிலர்;
எதிர்ப்படு வார், பலர்;
முடைப்பட நில்லாதே,
பாப்பா!—உன்
முன்காலை வாங்காதே,
பாப்பா!—உள
முனைப்பில் தளராதே, பாப்பா!

குடை பிடிப் பார், சிலர்;
குழி பறிப் பார், சிலர்
கொள்கை மயங்காதே,
பாப்பா!—உன்
கூர்த்தவிழி தாழ்த்தாதே
பாப்பா! உளங்
குலைந்து வருந்தாதே, பாப்பா,

படிப்படி யாகத்
துடிதுடிப் போடு,
அடியை எடுத்து வை,
பாப்பா!—நீ
முடிவு வரைக்கும் நட,
பாப்பா!—ஒரு
முன்னேற்றம் கண்டுவிடு,
பாப்பா!

குரல்: 7
இசை: 9-11.

விலை
35 காசு.

# குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சமன்றோ?

எனைவேண் டாதவர் சிலரிங் கிருக்கலாம்;
எனக்குவேண் டாதவர் எவருமிலர்!—ஒரு
தினைவேண் டாதவர் எறும்புளதோ?—பூந்
தேன்வேண் டாத, தே னீஉளதோ?

தமிழ்வேண் டாதவர் சிலரிங் கிருக்கலாம்;
தமிழ்க்குவேண் டாதவர் எவருமிலர்!—மணங்
கமழ்நறு மலரினை விரும்பிலரேல்—அவர்
கண்ணிலும் உணர்விலும் கசடுமுண்டே!

மலைவிரும் பாதவர் சிலரிங் கிருக்கலாம்;
மலைக்குவேண் டாதவர் எவருமிலர்!—இசைக்
கலைதரும் இன்பினை வெறுப்பவரேல்—அவர்
காதிலும் கருத்திலும் குறைகளுண்டே!

தென்றலை நிலவினைப் பகைப்பவ ரே, நறுந்
தீந்தமிழ் உளத்தினைப் பகைப்பவராம்!—உயர்
குன்றினைத் தழுவிடும் அருவியைப்போல்—என்
குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சமன்றோ?

அன்புரை பலகால் வெளிப்பட லாம்; கடும்
அனலுரை சிலகால் புலப்படலாம்!—அதால்
துன்பிருந் தாலும்நற் பயனிருக்கும்—பின்
துயர்ப்படுங் கால், உளந் துணைவருமே!

ஒன்றினை எண்ணியும் உதவியெண் ணியும்பல
உளவுகள் நினைந்தெனை நெருங்கிடலாம்—அவை
நன்றெனை முடிந்திடில் புகழ்வதுவோ?—நிலை
நலிந்திடில் முனிந்தெனை இகழ்வதுவோ?

பொதுநலம் நினைந்துநான் இயங்கையி லே, தனிப்
போக்கினுக் கொருகால் தடைவரலாம்!—உடன்
எதுவிளை வெதுசரி என நினைந்தே—உயர்
வேற்றத்தைக் கருதிடில் முரண்வருமோ!

கதிரினை வானினை மழையினைக் கடலினைக்
காற்றினை யாவையும் நினைக்கையிலே—அவை
சிதர்தரும் ஒளி, வெளி, துளி, உவர்ப்பை—கடுஞ்
சீற்றத்தைக் கண்டுளம் வெறுப்பதுண்டோ?




# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!


குரல்-7.-தி. பி. ௨௲௫ -விடை-கடகம் (சூன்-ஆக74)-இசை-9-11.


## பண்பாடும் நாகரிகமும்!

கல்வி கண் போன்றது; கல்வியில்லாவிட்டால் மக்கள் அறிவு பெற முடியாது; கற்கக் கற்கத்தான் அறிவு வளர்ச்சி பெறும்; வாழ்க்கைக்குத் தேவையான செல்வங்கள் அனைத்திலும், கல்விச் செல்வமே தலை சிறந்தது; அழியாதது; என்றெல்லாம் கல்வியின் பெருமையைச் சான்றோர்கள் கூறுவர். ஆனால் அத்தகைய சிறப்புப் பொருந்திய கல்வியும் மக்கள் பண்பாடு எய்தவில்லையானால் பயனற்றதாகப் போய்விடும் என்பதையும் அச் சான்றோர்களே வலியுறுத்திக் கூறியிருக்கின்றார்கள்.

பண்பாடு என்பது வாழ்க்கையை நெறிப்படுத்தும் ஒருவகை ஒழுக்கம். பண்பாடு இருவகைப்படும். ஒன்று, அகத்தைச் செப்ப முறச் செய்வது; இரண்டு புறவாழ்வைச் செப்பமாகச் செய்வது. இனி, அகத்தைச் செப்பமாகச் செய்வதைத்தான் பண்பாடு என்று சிறப்பாகவும், புறவாழ்க்கையைச் செப்பமாகச் செய்வதை நாகரிகம் என்று பொதுவாகவும் குறிப்பர். பண்படுத்துதலே பண்பாடு


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.

எனப்பெறும். அகத்தை அல்லது உள்ளத்தைப் பண்படுத்துவது என்றால், இவ்வுலகத்தில் பிறந்துள்ள மக்களெல்லாரும் ஒழுங்காகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் ஒவ்வொருவரும் சில நெறிமுறைகளோடு வாழ முயற்சி செய்வது என்பதுதான். புற வாழ்க்கையைச் செப்பமாகச் செய்வது அல்லது நாகரிகமாக வாழ்வது என்றால், மக்களுக்குத் தேவையான வாழ்க்கை ஏந்துகளை (வசதிகளை)ச் செய்து கொள்வது என்பது பொருளாகும். தன்னைப் போல் பிறரையும் எண்ணுதல், தனக்கும் பிறர்க்கும் ஏற்றவாறு நல்லனவற்றையே-மகிழ்ச்சி தருவனவற்றையே செய்தல் முதலியவை அகவொழுக்கம் அல்லது பண்பாடு என்பதற்குரிய செயல்களாகும், நல்ல தூய்மையான உடைகளை உடுத்தல், உண்ணுவதற்குரிய, உடல் நலத்துக் குகந்த உணவுப் பண்டங்களை விளைவித்தல், நல்ல வெளிச்சமும் காற்றோட்டமுள்ள வீடுகளை அமைத்துக் கொள்ளுதல் முதலியன புறப் பண்பாடு அல்லது நாகரிகம் என்பதற்குரிய செயல்களாகும். இவ் விரண்டு நிலைகளையும் உணர்வதற்கு அறிவு தேவைப்படுகின்றது. அந்த அறிவை வளர்ப்பதுதான் கல்வி.


எனவே, கல்வி கற்றவர்கள் மேற்கூறிய முறைகளில் அகப் பண்பாட்டுடனும் புற நாகரிகத்துடனும் வாழக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவற்றை நன்றாக அறிந்து கொண்ட ஒருவன் அவ்வறிந்து கொண்ட நிலைகளுக்கேற்ப வாழ முற்பட வில்லையானால் அவனைப் பண்பாடற்றவன் என்றும் நாகரிகமற்றவன் என்றும் சொல்கின்றோம். ஒருவரோ டொருவர் அன்பு செய்தல், ஒருவர்க்கு ஒருவர் துன்பு நினையாதிருத்தல்—முதலியன சிறந்த பண்பாடுகள் ஆகும். பொய் பேசுதல், ஏமாற்றுதல், பிறர் பொருளைத் திருடுதல், நமக்கேற்படும் நன்மையின் பொருட்டுப் பிறரைத் துன்புறுத்துதல் முதலியவை பண்பாட்டுக் குறைவான செயல்களாகும்.


உடலைத் தூய்மையாக வைத்திருத்தல், கந்தல் ஆனாலும் துவைத்து உலர்த்திய ஆடைகளை உடுத்தல், புதியனவும் உடல் நலத்துக் குகந்தனவும், சிறந்தனவுமாகிய உணவுகளை அளவாக உண்ணுதல், குடியிருப்புகளையும், தெருக்களையும், ஊரையும் தூய்மையாகவும் துப்புரவாகவும் வைத்துக் கொள்ளுதல் முதலியவை சிறந்த நாகரிகச் செயல்களாகும். கண்ட இடங்களில் எச்சில் துப்புதலும், குப்பை கூளங்களைக் கொட்டுவதும், குளிக்காமல் அழுக்கடைந்த உடைகளை உடுத்தலும்,கூட்டத்தில் வரிசையாகச் செல்லாமல்,அடித்துப் பிடித்துத் தள்ளிக்கொண்டு முரட்டுத்தனமாகப் போவதும் அநாகரிகமான அல்லது நாகரிகக் குறைவான செயல்களாகும்.

இக்காலம் அறிவு வளர்ச்சிக் காலம் என்று சொல்லப் பெறுகிறது. ஆனால் பண்பாட்டுக் குறைவான செயல்களும் நாகரிகக் குறைவான செயல்களும் பல நடைபெறுகின்றன. படித்தவர்களும் படியாதவர்களும் ஒரே படியாகவே நடந்து கொள்வதைப் பார்க்கின்றோம். கல்வியால் அறிவுணர்ச்சி வளர்ந்திருந்தாலும், அவ்வறிவுணர்ச்சி நம்மைப் பண்படுத்திக் கொள்ளவும் நாகரிகப் படுத்திக் கொள்ளவும் பயன்படுவதில்லை. பொய் பேசுவது பற்றி யாரும் வெட்கப்படுவதில்லை. பிறரை ஏமாற்றுவதை எவரும் தவறு என்று நினைப்பதில்லை. ஒருவர்க்குத் துன்பம் தருவதைப் பண்பாடற்ற செயல் என்று எவரும் அருவருப் படைவதில்லை.

வானொலிப் பெட்டி நம் கைகளில் கிடைத்ததென அதனை எவ்வளவு உரக்க முடுக்கிவிட்டுப் பிறர் விரும்பாத பொழுதும் அவர் காதுகளைப் புண்ணாக்க முடியுமோ, அவ்வளவு நாகரிகமென நாம் கருதுகின்றோம். தெருவில் எவர் நடந்தாலென்ன போனாலென்ன என்று மாடி மேலிருந்து குப்பைகளைத் தெருவில் வீசி யெறிகின்றோம். தெருவில் போகும் பொழுது ஓர் ஓரமாக நடவாமல், இரண்டு மூன்று பேர்களாய்ச் சேர்ந்து, பேசிக் கொண்டும் உரக்கச் சிரித்துக் கொண்டும் போவதை நாகரிகமற்ற செயல்கள் என்று எவரும் நினைப்பதில்லை. இவற்றை யெல்லாம் தவறுகள், குற்றங்கள் என்று உணர்ந்து, நம்மைத் திருத்திக் கொள்ள வில்லையானால் நாம் கல்வி கற்பது எதற்கு? நாம் பெற்ற அறிவால் என்ன பயன்? படிப்பது வேலை செய்வதற்கு,பணம் சம்பாதிப்பதற்கு என்று மட்டும் நினைக்கும் நம்மை பண்பாட்டால் உயர்ந்தவர்கள், நாகரிகத்தால் சிறந்தவர்கள் என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

எனவே, கல்வியின் விளைவு அறிவு வளர்ச்சி என்றும், அறிவு பெறுவது நாம் பண்பாடும் நாகரிகமும் அடையவே என்றும், அவ்வாறு வாழ்வதுதான் மக்கள் வாழ்க்கை என்றும், அல்லாக்கால் நாம் வாழ்வது விலங்கு வாழ்க்கையே என்றும், விலங்குகள்போல் நாம் வாழ்ந்து கொண்டு நம்மைப் பகுத்தறிவு பெற்றவர்கள், உயர்ந்தவர்கள் என்று பேசிக்கொள்வதில் பயனில்லையென்றும், அதால் உலகம் உய்யப்போவதில்லையென்றும், இறுதியில் அழிவே நேருமென்றும் உணர்ந்து கொள்க!






"வல்ல விலங்கரசே!
வானடர்ந்த காட்டிலுள்ள
எல்லா விலங்குகளும்
ஏற்றமுற வாழ்ந்துவர
நல்லரசு செய்து
நலங்காத்து நிற்கின்றீர்!
புல்லொன்றும் தங்களது
போக்கிலெதிர் நிற்காதே!
ஈங்கிப் படியாய்
இருக்கையிலே தான், மன்னு, —1405

ஆங்கொருவன் காட்டிற்
கதிகாரி என்கின்ருன்......"
—என்றுரைத்து மேலும்
இழுத்துரைக்கப் போகையிலே,
நின்று, அரிமா, "ஏடா! ஓ!
என்ன நினைக்கின்ருய்?
மன்றிதுவாம்; எண்ணிக்கொள்!
மற்றிங் குளருதே!"
என்றே இடிக்குரலால்
எண்டிசையும் தாக்கியது! —1416

கூழை நரிநடுக்கங்
கொள்ள, உடல்வெயர்க்க
"ஏழையேன், என்சொல்லில்
ஏதும் பிழையில்லை;
இங்கிருந்து நேர்வடக்கில்
ஈரிரண்டு கல்தொலைவில்

பொங்குபுனல் தேங்கிப்
பொழிலொன்றும் உள்ளது;. அங்குத்
தாழை விரிந்து
தரைமூடிக் கொண்டிருக்கும்!

வாழை செறிந்திருக்கும்;
வாகை நிழல்கவிக்கும்!
அந்தமரக் காவில்
அடியேன் அமர்ந்திருந்தேன்!
வந்ததங்கே வால்சுழற்றி
வன்காளை மாடொன்று!
கூர்த்தவிரு கொம்புகளும்
கொல்லுமிரு வேல்விழியும்
ஆர்த்தவொரு பேரொலியும்
ஐயாவே, என்சொல்வேன்!

வந்துநின்ற மாட்டின்
வரலாறு கேட்டதற்குத்
தந்த உதையாலென்
தாடை கிழிந்ததையா!
கொம்பொன்றால் என்கழுத்தில்
குத்திவிட்ட காயமிது!
வம்புவரு மென்றேநான்
வாயுந் திறக்கவில்லை;
மாடுவந்து தாக்கியதும்
மன்னா, வருத்தமில்லை!

காடெனக்குச் சொந்தமென்று
கத்தியது தான்வருத்தம்!
பேரரசே! உங்கள்
பிடரிக்கு முன்னாக
ஆர்வந்து நின்றுரைப்பார்?
அவ்வா றிருக்கவொரு
காளைமா டென்றன்
கழுத்தை முறிப்பதுவா?
ஆளை அனுப்பி
அழைத்துவரச் சொல்லுங்கள்!

தக்கபடி தண்டம்
　　தரவேண்டும், வேந்தே!"—என்(று)
ஒக்கபடி குள்ளநரி
　　ஓங்கி உரைத்திடவே,
காட்டுவேந் தற்குக்
　　கழுத்துமயிர் ஆடியது!
நிட்டுமுக மீசை
　　நுனிநீர் அரும்பியது!
நெற்றிமே லேறியது!
　　நேர்நின்ற கண்விழிகள்!

முற்றிய வன்சினத்தால்
　　மூக்குத் தொளைவிரியச்
செம்மண் முகமாறிச்
　　செவ்வானம் போல்சிவக்க,
"எம்மண்ணில் வந்தோன்—
　　எமையிழித்தோன்—தன்னைப் போய்க்
கட்டி யிழுத்துவா"
　　என்றோர் களிற்றுக்குக்
கட்டளை யிட்டகுரல்
　　காட்டை உலுக்கியதே!

(—தொடரும்)


# 'தென்மொழி'

51, அருணாசல (ஆசாரி) தெரு, திருவல்லிக்கேணி,
**சென்னை-600005.**

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் : | 12-00 உருபா | 15-00 உருபா | 20-00 உருபா |
| அரையாண்டுக் கட்டணம் : | 6-00 உருபா | 7-50 உருபா | 10-00 உருபா |
| தனியிதழ் : | 1-00 உருபா | 1-25 உருபா | 1-75 உருபா |

ஓரிதழுக்கு உரு. 2-00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

சிறுகதை

# அழுத கண்ணீர்!

—மா. பொழிலன்—

உந்து வண்டியில் ஏறிக் கொண்டு அமர்ந்து விட்டேன். வண்டி இன்னும் புறப்படவில்லை. சரி, பழம் வாங்கி வரலாம் என்று, வாங்கிவரச் சென்று திரும்பினேன். பழக்கடைக் காரனிடமும் மிகுந்த சண்டை போட்டுக்கொண்டு வந்து விட்டேன். உண்பதற்குப் பழமும் இல்லை. வண்டியும் புறப்பட்டு விட்டது.

உந்து வண்டிச் சீட்டு ஆய்வு செய்பவர் வந்தார். என் மனம் படக், படக் என்றது. என்னிடம் சீட்டுக் கேட்டார். இல்லையென்று விழித்தேன். அவர் பலராலும் இழிவு படும்படி திட்டி விட்டார். வண்டியிலிருந்து கீழே இறங்கிவிடச் சொல்லி விட்டார். ஒன்றும் சொல்லாமல் கீழே இறங்கி வந்து விட்டேன். அப்பொழுதுதான் எனக்கு வீட்டில் சண்டை போட்டுக் கொண்டு வந்தது நினைவிற்கு வந்தது. அதை எண்ணி வருந்தினேன். அழுது கொண்டே நடந்து சென்றேன். உணவில்லாமல் தவித்தேன். இப்படியே சில நாட்கள் ஓடின. எனக்குத் துணை செய்வார் யாரும் இல்லை.

அருகிலிருந்த தொடர்வண்டி நிலையத்திற்குச் சென்றேன். அங்கு அமர்ந்து கொண்டு இருந்தேன். சென்னை செல்லும் வண்டி வந்தது. ஏறிக் கொண்டேன். வண்டி திண்டிவனத்தைத் தாண்டியது. சீட்டுக் கேட்பவர் வந்தார். நான் உடனே உறங்குவதுபோல் நடித்தேன். உறங்கி விட்டேன். யாரோ ஒருவர் என்மேல் கை வைத்தார். தூக்கத்தில் ஒன்றும் தெரியவில்லை. அவர் என்னை, "அடேய்! சீட்டு எங்கே" என்று கேட்டார். விழித்துக் கொண்டேன். என் நினைவு வீட்டின் மேல் இருந்ததால் ஒன்றும் புரியாமல் விழித்தேன். உடனே அவர் "சென்னையில் இறங்கி என்னுடன் வா" என்றார். சென்னை வந்து விட்டது. அவர் என்னை அழைத்துச் சென்றார். செல்லும் பொழுதே, "அடேய்! இங்கேயே நில் வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு அறையினுள் சென்றார். "வணக்கம் அம்மா! பாண்டியன் வண்டியில் அந்தக் குற்றவாளியை அழைத்து வந்துள்ளேன்" என்றார். திரும்பி வந்து என்னையும் அழைத்துச் சென்றார். நான் உள்ளேபோய்ப் பார்த்தேன். அங்கு என் அன்னையார் நின்று கொண்டு இருந்தார். என்னைத் தழுவிக் கொண்டு ஒன்றும் பேசாமல் நின்றார். நானும் அவ்வாறே அழுதபடி நின்றேன். ○

# செய்தி தெரியுமா?

க. மணிமொழி.

## காது கேளாதவர்கள்!

இந்தியாவில் 18 இலக்கத்திற்கு மேல் காது கேட்காத இளைஞர்கள் இருக்கின்றனர். இவர்களின் அகவை வரம்பு 5 முதல் 15 வரை ஆகும். 18 இலக்கத்தில் இரண்டு இலக்கத்தினர் தமிழ் நாட்டி லுள்ளனர். இந்தியாவில் அத்தகையவர்களுக்காக 70 பள்ளிகள் உள்ளன. தமிழ்நாட்டில் 17 பள்ளிகள் உள்ளன. அண்மையில் மற்று மொரு பள்ளியினைத் திருச்சியில் தொடங்க நகராட்சியினர் ஆவன செய்து வருகின்றனர்.

## வரிச்சுமை!

உலகிலேயே மிக அதிக வரிச்சுமை உள்ள நாடு சுவீடன் நாடு ஆகும். தன் நாட்டில் வாழ்பவர் ஒவ்வொருவருடைய மொத்த வருமானத்திலும் 43 விழுக்காட்டை வரியாகவும், குமுகாயப் பாதுகாப்புக் கட்டணமாகவும் வாங்கி விடுகிறது. சுவீடனுக்கு அடுத்தபடியாக நெதர்லாந்து வரி வாங்குகிறது. அது மொத்த வருமானத்தில் 39.7 விழுக்காட்டைப் பெற்று விடுகிறது. அடுத்தடுத்து இடம்பெறும் சில நாடுகள்: தென்மார்க்கு 38.7%, நார்வே 38.4%, இங்கிலாந்து, இசுகாத்துலாந்து, வேல்சு 36.6%, பிரான்சு 36.3%.

## பல்கலைக் கழகமும் கல்லூரிகளும்

வெளிநாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்தின் கீழும் 30 (அ) 40 கல்லூரிகளே செயல்படும். ஆனால் நம் தமிழ் நாட்டிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 104 கல்லூரிகளும், மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழ் 74 கல்லூரிகளும் உள்ளன. இத்தனைக் கல்லூரி களின் செயற்பாட்டினையும், ஒரே மேலாண்மை நோட்டமிடுவது எளிதான செயலன்று. அப்படிச் செய்தாலும் அது செப்பமாக எப்படி அமையும்? அத்துடனின்றி, மேற்குறித்த 178 கல்லூரிகளில் 127 தனியார் கல்லூரிகள், 51 மட்டுமே அரசினர் கல்லூரிகள். அரசு, இக்கால் கல்வியில் எந்த அளவிற்கு நாட்டஞ் செலுத்துகின்றது என்பதை இதைக் கொண்டே எளிதில் கணித்து விடலாமே!

# பயன் மொழிகள்.

- இலக்கியத்தின் நலிவு, தேயத்தின் நலிவாகும்; வீழ்ச்சியில் இரண்டும் கலந்தே இருக்கும். —கதே
- இன்று இலக்கியத்தில் ஏராளமான கொத்தர்கள் இருக்கின்றனர். ஆனால் கைதேர்ந்த சிற்பிகள்தாம் குறைவாக உள்ளனர். —சோபெர்ட்டு
- தன்னை இன்னொருவன் வென்று விடுவானோ என்று அஞ்சுபவன் உறுதியாகத் தோல்வியுறுவான். —நெப்போலியன்
- உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான்; தன்னை அறிந்தவன் செருக்காயிருக்கமாட்டான். —சிம்மன்சு

(தொகுப்பு: மரியநேயன், கரிசல்பட்டி)

# இசைவாணர் ஒல்ஃப்காங் மோசார்

—இறைமகிழ்நன், தஞ்சாவூர்.

ஆத்திரிய நாட்டைச் சேர்ந்த வியன்னுவுக்கு அருகில் உள்ள ஒரு சிறு நகரில் 1756-ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 27-ஆம் நாள் ஒல்ஃப்காங் மோசார் (Wolfgang Mozart) பிறந்தார். இவர் இளமையிலேயே மிக்க நுண்ணுணர்வும், எதையும் கூர்ந்து நோக்கும் நுண்ணறிவும் உடையவராய் விளங்கினர். இவரது தந்தையார் இலியோபோல்டு (Leopold) என்பவராவார். இவர் தன் மகளுக்கு (மோசாரின் தமக்கைக்கு) இசைப்பயிற்சியளித்து வந்தார். தன் தந்தையார் தமக்கைக்கு அளித்து வரும் இசைப் பயிற்சியை, மூன்றுண்டுகளே நிரம்பப் பெற்றிருந்த மோசார் ஒவ்வொருநாளும் உன்னிப்பாய்க் கவனித்து வந்தான். ஒருநாள் இசைக் கருவியின் முன்னமர்ந்து, தன் சின்னஞ்சிறிய விரல்களால் விசைகளைத் தவறின்றி மீட்டி இன்னிசை வழங்கினுன். மூன்றுண்டுகளே நிரம்பப் பெற்ற தம் மகனின் அருஞ்செயல் திறன் கண்டு வியந்த தந்தையார், அன்றிலிருந்து மோசாருக்கும் இசைப்பயிற்சி அளிக்கத் துவங்கினர். தனது ஆரும் அகவையிலேயே மிக நுட்பமாக இசையமைக்கும் திறமை பெற்று 'இயற்கையை விஞ்சிய' சிறுவனய் விளங்கினுன் மோசார்.

பின்னர் இவன் தந்தையார் இவனை மியூனிச் (Munich) நகரம் அழைத்துச் சென்று ஒரு பெரும் மக்கட் கூட்டத்தினருக்கு இன்னிசை வழங்கச் செய்தார். மிகவும் சிக்கலான பாடல்களையும் கூட, சிக்கறுத்து, மிக எளிதாய் இசைக் கருவியில் புகுத்தி இன்னிசை வழங்கிய இச்சிறுவனின் திறம் கண்டு வியப்பும் அதிர்ச்சியும், மகிழ்வும் ஒருங்கே அடைந்த மியூனிச்சு நகர மக்கள் மோசாரின் திறமையை மிகவும் போற்றிப் புகழ்ந்தனர்.

மீண்டும் வியன்னுவுக்குத் திரும்புங்கால், வழியில் 'துறவிய இல்லம்' (Monastery) ஒன்றில் தந்தையும் மகனும் ஓய்வாக தங்க நேர்ந்தது. மோசார், அங்கிருந்து ஒரு பழைய இசைக் கரு யின் முன்னமர்ந்து இன்னிசை மீட்டினுன் அப்போது அவ்வழி சென்ற மூன்று துறவியர் இவ்வின்னிசை ஒலியால் கவரப்பட் அருகே வந்து, வியந்து மோசாரைப் பாராட்டினர். பின்ன மோசாரின் திறமையைக் கேள்வியுற்ற ஆத்திரிய மன்னர், த மாளிகைக்கு மோசாரை அழைத்து இன்னிசை விருந்து வழங்குமா பணித்தார். சிறுவனுன மோசாரோ இசைக்கருவியின் விசை

துணியால் மூடப்பட்டிருந்ததையும் பொருட்படுத்தாது பிழையற இசைத்து, தன் ஒபபற்ற இசைத் திறமையை நிலை நாட்டினன். பின்னர் பிரான்சு நாட்டின் தலைநகரான பாரிசு அரண்மனையில் மன்னர்முன்பும், இலண்டனில் மூன்றும் சியார்சு மன்னர்முன்பும் தன் திறமையைக் காட்டிப் பெரும்புகழ் பெற்றான் சிறுவன், இசை வாணன் மோசார். இவ்வாறே மூன்றாண்டுகள் கழிந்த பின்னர், மீண்டும் இத்தாலி, நேப்பிள்சு ஆகிய நாடுகளில் இன்னிசை நிகழ்ச்சிகள் நடத்தினன். நேப்பிள்சு நாட்டு மக்கள் மோசாரின் கையில் ஒளிவிடும் வயிரக் கணையாழி அணிந்திருப்பதனால்தான் இசை மிகவும் கவர்ச்சியளிக்கிறது என்று பொருளின்றி கூறினர். உடனே மோசார் கணையாழியைக் கழற்றி எறிந்துவிட்டு முன்னிலும் திறமையாய் இன்னிசை வழங்கிப் பாராட்டுகள் பெற்றான்.

அறிஞர்களுடையவும், சிறந்த கலைவாணர்களுடையவும் வாழ்க்கைகளை உன்னிப் பார்க்குங்கால், குடும்பத் தொல்லை களினாலேயே அவர்கள் மிகவும் அல்லற்பட்டு உள்ளமை நமக்குக் கண்கூடாம். இச் செயலுக்கு நமது இசைவாணர் மோசாரும் விலக் கல்லர். மோசாரின் துணைவியார் பல நற்பண்புகள் வாய்க்கப் பெற்றவராயினும், குடும்பப் பொறுப்பேற்று நடத்தும் திறமை அற்றவராய் இருந்தார். வருவாயினும் மிகுதியாகக் குடும்பச் செலவுகள் செய்தமையால் மோசாரின் குடும்பத்தில் வறுமை நிழலாடத் தொடங்கியது. ஐந்து பொற்காசுகள் கடனாகப் பெற்றதைத் திருப்பியளிக்க முடியாமையால் மோசார் அரசினரால் சிறைப்படுத்தப் பட்டார். பலநாட்கள் மோசாரின் குடும்பம் பட்டினிச் சாவிலிருந்து அவர் நண்பர்களால் காப்பாற்றப்பட்டுள்ளது. ஒரு முறை ஆத்திரிய நாட்டு மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டு இன்னிசை வழங்க வேண்டுமென்று அரசினரிடமிருந்து மோசாருக்கு அழைப்பு வந்தது. தலைநகர் செல்லும் வழிச் செலவுக் காகத் தான் உணவுண்ணும் வெண்பொற்தட்டை ஈடு (அடகு) வைத்துப் பணம் பெற்றார்.

உடல் நலிவாலும், வறுமையாலும் மோசார் அல்லல் உற்ற போதும், வீட்டில் உலை கொதிக்க வேண்டித் தொடர்ந்து பல பாடல் களுக்கு இசையமைத்துப் பொருளீட்டி வந்தார். 1791-ஆம் ஆண்டு சூலைத் திங்களில் (தனது 35-ஆம் அகவையில்) ஒரு நாளிரவு முன் னர் அறிமுகமற்ற ஒருவர் மோசாரைத் தேடிவந்தார். ஒரு

# தெரிந்து கொள்ளுங்கள்.

ப. ஆறுமுகம், வதத்தக்கவுண்டன் வலசு.

0 மாந்தனின் குருதி ஒரே வகையானதன்று. குருதி மாந்தனுக்கு மாந்தன் வேறுபடுகிறது. குருதி நான்கு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது என்பதை முதன் முதலில் இலாண்ட்சுடீனர்' (Landsteiner) என்னும் மருத்துவர் கண்டுபிடித்தார்.

0 மாந்தனின் உயிர் முடிச்சு எனப்படுவது முகுளம்.

0 வெடிமருந்துகளில் ஒருவகை துமுக்கி மருந்து. இது சீனர் களால் முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்டதாகக் கருதப்படு கிறது.

0 இடியும் மின்னலும் ஒரே நேரத்தில்தான் தோன்றுகின்றன.

0 நாம் உயிர்க்கும் பொழுது உள்ளிழுக்கப்படும் காற்றில் 20.94 விழுக்காடு உயிர்வளியும், 0.04 விழுக்காடு கரியிருவளியும் உள்ளன.

0 உடலில் உள்ள இயக்குதசைகளை ஒருங்கிணைந்து செயல்பட வைபபது சிறுமூளை. கள்குடிக்கும் பொழுது சிறுமூளை தாக்கப் படுகிறது. எனவே இயக்குதசைகள் ஒருங்கிணைந்து செயல் படுவதில்லை. இதனல் இயக்கு தசைகள் தம் விருப்பம் போல் செயல்படுகிறது ஆதலால்தான் கள்குடித்தவன் தள்ளாடுகிருன்.

0 உகிர், மேல்தோல், மயிர்க்கால்கள் ஆகிய பகுதிகளில் நரம்புகள் இல்லை. மற்ற எல்லாப் பகுதிகளிலும் அவை காணப் படுகின்றன. நரம்புகள்தாம் உணர்ச்சியை உணர்கின்றன.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

செவ்வரின் துணைவியார் இறந்து விட்டதாகவும், அது குறித்துத் தாம கொண்டு வந்துள்ள இரங்கற்பா ஒன்றுக்கு இசையமைத்துத் தரும்படியும் மோசாரை வேண்டினர். மோசார அப்பாடல் முழுமைக் கும் இசையமைத்து முடிக்கும முன்னர், அப்பாடலே மோசாருக்கும் இரங்கற் பாடலாய் அமைந்துவிட்டது.

உலகின் தலைசிறந்த இசைவாணரான மோசாருக்கும் கூட அவர் ஓர் ஏழை எனபதால ஒரு பொதுவான மாந்தனுக்கு உரியது போன்ற, குறிப்புகள் ஏதுமற்ற ஒரு கல்லறையில் மோசாரின் உடலும் அடக்கம செய்யப்பட்டது. பின்னர் அவர் மனைவியாலும் கூட அக் கல்லறையை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. கலைவாணர்களையும், அறிஞர்களையும் மதிக்கத் தவறும் இவ்வுலகின் நன்றி கெட்ட செயல்தான் என்னே! O

# வானவில்: (Rainbow)

ப. ஆறுமுகம். வத்தக்கவுண்டன் வலசு.

மழைக் காலங்களில் வானவில்லைப் பார்த்திருப்பீர்கள், இல்லையா? இஃது எவ்வாறு ஏற்படுகின்றது என்று உங்களுக்குத் தெரியுமா?

வானவில் ஏழு நிறங்களை உடையது. அவை பின் வருமாறு:

க. ஊதா (Violet). உ. கருநீலம் (Indico). 3. நீலம் (Blue), 4. பச்சை (Green), 5 மஞ்சள் (Yellow), 6. ஆரஞ்சு (Orange), 7. சிவப்பு (Red).

வளிமண்டலத்தில் முகில்களாக மிதந்து கொண்டிருக்கும் நீர்த் துளிகளில் ஞாயிற்றொளிக்கதிர் நுழையும் பொழுது ஒளி விலகலினால் நிறப்பிரிகை அடைகிறது.

(ஞாயிற்றொளியின் வெண்ணிறம் ஏழுநிறங்களாகப் பிரிவடைகின்றன. இவ்வேழுநிறங்கள் தனித்தனியாய்ப் பிரிவதையே நிறப்பிரிகை என்கின்றோம்.)

பின்பு ஒளிக்கதிர் நீர்த்துளிகளின் பின் புறத்தில் முழு உள் எதிரொளிப்பு ஏற்பட்டுத் திருப்பி அனுப்பப் படுகிறது. அதன் பிறகு நீர்த் துளியின் முன்புறத்தில் ஒளிக்கதிர் வெளிவரும் பொழுது திரும்பவும் விலகல் (சிதறல்) அடைகிறது. மேற்புறமுள்ள நீர்த்-துளிகளிலிருந்து ஆரஞ்சு, மஞ்சள் முதலிய ஏழுநிறங்களும் கண்ணுக்குத் தெரியும். சமத் தொலைவிலுள்ள நீர்த்துளிகள் ஒரு வட்டத்தில் அமைந்து கண்களுக்கு ஒரே நிறக்கதிர்களை அனுப்பும். வளைவான பாகத்தில் உண்டாகும் நிறக்கதிர்கள்தான் கண்ணுக்குத் தெரியும். மற்ற பகுதிகளில் உண்டாகும் நிறக்கதிர்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை. எனவே இவை அரைவட்ட வடிவில் அமைந்து நமக்குக் காட்சியளிக்கின்றன. இக்காட்சியே வானவில் (Rainbow) எனப்படும்.

---


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-I.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்.)

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 3-00 | 4-50 | 6-00 |
| தனியிதழ் ,, | 0-25 | 0-35 | 0-50 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# மறைமலை அடிகளின் அறிவுரைகள்.

தொகுத்தவர்: **தமிழரிமா.**

1. நோநந்தவறுமல் பள்ளிக்குச் சென்று, ஆசிரியர் கற்பிப்பவற்றை அவாவுடன கேட்டு உள்ளத்தில் நன்கு பதித்தும், அவர் கேட்கும வினுக்கட்குப் பொருத்தமான விடைகள் பொழிந்தும், தம்மோடு உடன்பயிலும் மாணுக்கருடன் அன்புடன் கேண்மை கொண்டும் ஒழுகுதல் வேண்டும.

2. அன்றுடம் பாடத்தில் வரும் அருஞ்சொற் பொருள்களேயும் முதன்மையாக நினேவில் வைக்கவேண்டிய பகுதிகளேயும், பாடச் சுருக்கங்களேயும் ஒரு குறிப்பேட்டில் அவ்வப்போது, குறித்துவைத்துக் கொண்டு, அவற்றைப் பின்னுட்களில் திருப்பித் திருப்பிப் பார்த்து நிஜனவுக்குக் கொண்டு வருக.

3. நீராடியபின் தோய்த்துலர்ந்த தூய ஆடைகளேயே உடுத்துக. முன்னுட் கட்டியிருந்த ஆடையைப் பின் நாளில் உடுத்தல் சிறிதும் ஆகாது.

4. நினைவைப் பலவிடங்களிற் சிதறவிட்டுக் கொண்டு, தவளே போல் எவ்வளவு கூவிப்பயின்றுலும், பாடப் பொருள் மனத்திற் படிய மாட்டா. உரத்துக்கூவாமல் மெல்லிய குரலிலாவது, அன்றி வாய் திறவாமல் அமைதியாயிருந்தாவது பாடப் பொருளேயும் சொல்லேயும் நினேவில் ஏற்றுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் செவ்வையாகத் தெரிந்து கொண்டு பயிலுதல் முதன்மையானது. இதற்கு அகரமுத லியைப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு அதன்கண் பார்த்துப் பார்த்துத் தெரிந்து கொள்க.

6. கெட்ட நடவடிக்கையுள்ள பிள்ளேகளுடன் நேயங்கொள்ளுதலும் ஆகாது; பகைத்தலும் ஆகாது. அவர்களுடன் நேயங் கொண்டால் அவர்களுடைய தீய இயற்கை உமக்கும் படிந்து விடும்; அவர்களுக்கு வரும் துன்பம் உம்மையும் சாரும். அவர் களேப் பகைத்தாலோ அவர்கள் உம்மைப் பழிப்பர்; ஏசுவர்; அடிப்பர்; பிறரை ஏவியும் உமக்குத் தீங்கு செய்வர். ஆகவே அவரைக் காண நேரும் போதெல்லாம் இனிமையாகச் சில சொற்களேப் பேசிவிட்டுப் போய்விடுக!

7. நகரங்களில் உறையும் சிறுர் இயன்றமட்டும் காலே மாலே வேளேகளில் உலாவுதல், நடத்தல், ஓடல், குதித்தல், பந்தாடல் முதலிய உடற் பயிற்சிகளில், தமதுடல் நலத்திற்கும், ஒழிவு நேரத்திற்கும் வேண்டுமளவு கட்டாயம் பழகிவரல் வேண்டும்.

[மறைமலேயடிகளின் 'சிறுவர்க்கான செந்தமிழ்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்றவை.]

# ஊக்கம்.

— நா. எழில்-மகிழ்நன்.

ஓர் ஆசிரியரிடம் செழியன், தமிழன் எனப்பெயரிய மாணவர் இருவர் கல்வி கற்று வந்தனர். அவர்கள் இருவருமே படிப்பதில் மிகவும் ஆர்வமுள்ள இளைஞர்களாவர். ஆசிரியர் கொடுத்த வீட்டு வேலைகளைத் தப்பாது, செவ்வனே நாள் தோறும் செய்து வரும் இயல்பினர்.

ஒரு நாள் ஆசிரியர் படிப்புச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக்கும் போது, ஒன்பர் வந்து ஆசிரியரின் நண்பர் ஒருவர் இப்பொத்தகத்தைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னதாகச் சொல்லி, பளபளவென்று கட்டடம் (Binding) செய்த ஒரு பொத்தகத்தை ஆசிரியர் இடம் கொடுத்துச் சென்றார். அதை வாங்கி அண்மையிலுள்ள முட்டான் (Stool) மீது வைத்துவிட்டு தொடர்ந்து மாணவர்களுக்குப் பயிற்று வித்தார்.

ஆனால் அவர்களின் எண்ணம் படிப்பின் மீது மிகையாகப் பாவாது, அப்பொத்தகத்தின் மீதே இருந்தது. இளம் உள்ளங்கள் புதுமையை விரும்புவது இயல்புதாமே!

பின் ஆசிரியர் மாணவர்களின் படிப்பெண்ணம் சிதறியது கண்டு, அன்றைய பாடத்தை நிறுத்தினர். பிறகு ஆசிரியர் முட்டான் மீது வாங்கி வைத்திருந்த பொத்தகத்தின் சிறப்புப் பற்றி மாணவர்களின் எண்ண எழுச்சி மிகையாகிப் பொத்தகத்தைத் தொட்டாவது பார்த்துவிட துடித்தது.

தமிழன், செழியன்—அவாவினை உணர்ந்த ஆசிரியர் உடனே "நீங்களிருவரும் நாளை வரும்போது தனித்தனியே ஒவ்வொரு சிறு கதை எழுதிக் கொண்டு வரவேண்டும்; அவற்றில் யாருடைய கதை நன்றாக உள்ளதோ அவர்களுக்கு இந்நூலைப் பரிசாகக் கொடுப்பேன்" என்றார்.

தமிழனும் செழியனும் தம்தம் இல்லஞ்சென்று எழுதிட ஏடு எடுத்தனர். செழியன் எழுதியெழுதிப் பார்த்தான். அவன் கதைக்குச் சரியான கருவும் அமையவில்லை. கோவையாக எழுதவும் தெரியவில்லை. உடனே செழியன் பரிசு தேவையில்லை என்ற முடிவுடன் படுத்துறங்கி விட்டான்.

தமிழனும் அவன் போலவே எழுதியெழுதிப் பார்த்தான். அமைவு சரியாகவில்லை. அயர்ந்து சிந்நேரம் கீழ்நோக்கிய வண்ணம்

அமர்த்திருந்தான். அப்பொழுது அவன் பார்வையில்,ஓர் எறும்பு சிறிய வெல்லக் கட்டியை மிகக் கடினப்பட்டு இழுத்துச்சென்றது. தமிழன், அவ் வெறும்பையும் வெல்லக்கட்டியையும் சிறிது பிரித்தான். உடனே அவ் வெறும்பு வெல்லத்தை தேடிப் பிடித்து இழுத்துச் சென்றது. இவ்வாறு தமிழன் பன்முறை செய்தும், எறும்பு தன் வினையில் எள்ளளவும் சோர்வுறுது வெல்லத்தை இழுத்துச் சென்றது.

எறும்பின் இடைவிடாத முயற்சியைக் கண்ட தமிழனின் உள்ளம் உயிர்த்தெழுந்தது. ஐயறிவு உயிரி(பிராணி)யே இவ்வளவு ஊக்கத்துடன் செயல் படும்போது, ஆறறிவு படைத்த மாந்த இனமான நாம் இவ்வாறு சோம்பக் கூடாது என்ற முடிவுக்கு வந்தான். பின் இரவு நெடுநேரமாயினுங்கூட அயராது முயன்று செப்பமான முறையில் எண்ணி, அழகான கதையை எழுதி முடித்து, பின்பே உறங்கினுன்.

அடுத்த நாள் காலேயில் தமிழன் தன் கதையை ஆசிரியரிடங் காட்டி அவரின் பாராட்டையும் பொத்தகப் பரிசையும் பெற்றுன். செழியன் தன் இயலா நிலேயை எண்ணி மனம் மிக நைந்தான்.

ஆசிரியர், செழியனே ஏன் எழுதவில்லே என்று கரணியங் கேட்டார். அவன் உண்மையை உள்ளவாறு சொன்னுன். உடனே ஆசிரியர்,

"ஊக்கமது கைவிடேல்"

என்ற ஆத்திச்சூடிப் பாடலேயும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலேவின்றித்
தாழாது உஞற்று பவர்" (620)

என்ற திருக்குறளேயும்,

"முயற்சி திருவினையாக்கும்"

என்ற பழமொழியையும், தெள்ளத் தெளிய தமிழனுக்கும் செழியனுக்கும் விளக்கினுர்.செழியன், இனிமேல் தானும் தமிழன் போல் ஊக்கமுடன் செயல் படுவதாக உறுதி கொண்டான்.

ஆகவே, குழந்தைகளே! நீங்களும் தமிழன் போல் ஊக்கத்தினைக் கைக்கொண்டு வாழ்க்கையில் ஒளிர்ந்து வாழ்ந்து மகிழுங்கள்.

# முத்துமொழிகள்

தொகுத்தோன்: தமிழரிமா.

- எண்ணுவதானால் அமைதியாக எண்ணுங்கள்; செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள்; விட்டுக்கொடுப்பதானால் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுங்கள்; எதிர்ப்பதானால் திடமாக எதிருங்கள். —கோல்டன்.
- எல்லா ஆற்றலும் உங்களுக்கு உண்டு; தீங்கள் எதையும் செய்யலாம்; உங்களை நம்புங்கள். நாம் வலுவற்றவர்கள் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள். —விவேகானந்தர்.
- நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்பதைவிட, நீ நாட்டுக்காக என்ன செய்தாய் என்பதை உன்னையே நீ கேட்டுப்பார். —கென்னடி.
- பணம் சேர்ப்பவனுக்குச் செலவழிக்கத் தெரிவதில்லை. செலவழிப்பவனுக்குப் பணம் சேர்க்கத் தெரிவதில்லை. —பியூட்டி.
- யாரேனும் குறை கூறினால் அஃது உண்மையாயின் திருத்திக் கொள். பொய்யாயின் நகைத்து விடு. —எபிகுடசு.
- எல்லாம் போய்விட்டது என்று கவலைப்படவேண்டாம். எல்லாம் போய்விடவில்லை. எவராலும் வெல்ல முடியாத உண்மை இருக்கிறது. அதைக் கொண்டே எதையும் செய்து விடலாம். —மில்டன்.
- படிப்பின்றி அறிவுமட்டும் இருப்பது இடராக முடியும்; அறிவின்றி படிப்பு மட்டும் இருப்பது பயனற்றதாகும். —சாக்கன்.
- வாழ்க்கை என்பது ஓர் அலை போன்றது. அதன் வடிவமும் எண்ணமும் ஓயாமல் மாறிக்கொண்டேயிருக்கும். —இடிசுரலி.
- பெரும்பான்மையோரால் தங்களின் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளமுடிகிறது. ஆனால் மற்றவர்களின் இன்பத்தைத்தான் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. —வில்லியம்பால்சு.
- இன்பங்களைப் பெற முயல்வதைவிட நோக்கங்களைப் பெருக்க முயல்வதே நலம். —ஆவுப[illegible]
- செயல் பெரிதோ சிறிதோ, தம்மால் செய்யக் கூடியவற்றை சலிப்பின்றிச் செய்பவரே போற்றுதற்கு உரியவர். —கதே

# தமிழ்ச் சொல் வளம்.

## (உழவியற் சொற்கள்)

**மென்புலம் :** மருதம், நெய்தல் நிலங்கள்.

**வன்புலம் :** முல்லை, குறிஞ்சி நிலங்கள்.

**நாடு :** மருத நிலங்கள்.

**காடு :** மருதந் தவிர்த்த பிறதிணை நிலங்கள்.

**ஏர்க்காடு :** குறிஞ்சியின் உழுநிலம்.

**கொத்துக்காடு :** குறிஞ்சியில் உழத்தகா நிலம்.

**கொல்லை, புனம் :** குறிஞ்சியிலும் முல்லையிலும் உள்ள விளை நிலங்கள் (வானவாரிக்காடு).

**செய் :** மருத விளைநிலம்.

**இதை :** மருத நிலத்துள்ள புதிய கொல்லை.

**முதை :** மருத நிலத்துள்ள பழைய கொல்லை.

**புன்செய் :** சிறிது சீர் செய்யப் பெற்ற மருத நிலம் (கிணற்றுப் பாய்ச்சல் உடையது).

**நன்செய் :** நன்ருகச் சீர் செய்யப்பெற்ற மருத நிலம்.(ஆறு அல்லது ஏரிப் பாய்ச்சலுடையது.)

**கொல்லைப் பயிர் :** எள், கொள் முதலியன.

**புன்செய்ப் பயிர் :** கேழ்வரகு, சோளம், கம்பு முதலியன.

**நன்செய்ப் பயிர் :** நெல், கரும்பு முதலியன.

**பழனம் :** நன்செய்யுள் பழமையானது.

**கழனி :** போரடிக்கும் களமுள்ளது.

**பண்ணை :** பண்ணப்பட்ட நிலம். களமர் அல்லது செறுமர் என்னும் பண்ணையாட்கள் குடியிருந்து வேலை செய்யும் பெரிய வயற் பரப்பு (Farm).

**செறு :** சேறுள்ளதால் நன்செய்க்குப் பெயர்.

**வயல் :** வைப்பு (செல்வம்) போன்றதால் நன்செய்க்குப் பெயர்.

**ஏரி :** ஏர்த் தொழிலுக்கு உதவும் நீர்த்தேக்கம்.

**குளம் :** குளிக்கப் பயன்படும் நீர்த்தேக்கம்.

**சுவல் :** மேட்டு நிலம்.

**அவல் :** பள்ள நிலம்.

(பாவாணர்-பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும்)

தொடர்-10.

# இிறித்துவப் பெயர்களுக் கேற்ற தமிழ்ப் பெயர்கள்.

ஆடவர் பெயர்த் தொடர்ச்சி:

| கிறித்துவப் பெயர் | எந்த மொழி | அதன் பொருள் | அதற்கேற்ற தமிழ்ப் பெயர் |
|---|---|---|---|
| ஆர்வி Harvey | பிரெஞ்சு | கசப்பு | கைப்பன். |
| எக்டர் Hector | கிரேக்கம் | நிலையான, நேரிய, உறுதியான, | செந்நிலையன், நேரியன். |
| என்றி Henry | தியுத் தானியம் | வீட்டு அரசன், | மனைவேந்தன், மனையரசன். |
| எர்பர்ட்டு Herbert | ,, | சிறந்த மறவன் | ஒளிமறவன். |
| எர்வின் Herwin | ,, | படைக்கள விருப்பினன் | களவேட்டன், படைநம்பி. |
| ஆவர்டு Howard | ,, | தலைமைப் புரப்பாளன் | புரக்குநன். |
| ஊபர்ட்டு Hubert | ,, | அறிவின் ஒளி | அறிவொளி |
| ஐமன் Hyman | ஈபுரு | வாழ்க்கை | வாழ்நம்பி, வாணன். |
| இக்னேசியசு Ignatious | இலத்தீன் | தீப்போன்ற, வெப்பமான | அனலன், செந்தில், காந்தன். |
| ஐசக் Isaac | ஈபுரு | நகைக்கின்ற | நகையாளன், நந்நகை. |
| இசரயேல் Israel | ,, | இறைவனுக்கு வீரன் | இறைமறவன், கடவுட்படை. |
| சேம்சு, சேகபு James, Jacob | ,, | தலைகீழாக்குபவன் மாற்றுபவன் | வினைமாற்றி, நிலை நீக்கி. |
| சேவியர் Javier, Xavier | அரபி | பளிச்சிடும் ஒளிவிடும் | ஒளியன். |